**ஐக்கிய அமெரிக்க தூதரகம்**
**கொழும்பு**

# ஊடக அறிக்கை

**பொது அலுவல்கள் பிரிவு**
**தொ.பே.: +94 (1) 249-8100 ● பெக்ஸ்: +94 (1) 244-9070**
ஈமெயில்: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20190507 - 2

## அமெரிக்க இராஜாங்க செயலாளர் பொம்பேயோவின் அறிக்கை

மே 5, 2019

**ரமழான் நிகழ்வை முன்னிட்டு**

ஐக்கிய அமெரிக்க வெளியுறவுத்துறை சார்பாக, முஸ்லிம் சமூகங்களுக்கு சிறந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல முஸ்லிம்களுக்கு இந்த மாதம் புனிதத்தன்மை மறுசீரமைப்பு, இரக்கம் மற்றும் இணக்கமுறல், ஆதரவற்றவர்கள் மீதான இரக்கம், மற்றும் பல்வேறு சமூகங்களுக்கு இடையேயான ஒற்றுமை ஆகியவற்றில் கவனம் செலுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பமாகும். ஐக்கிய அமெரிக்காவில் பல மசூதிகள் மற்றும் வீடுகளானது, நமது பொதுவான அமெரிக்க விழுமியங்களான சமத்துவம், தொண்டு மற்றும் தாராள மனப்பான்மை ஆகியவற்றின்கீழ் ஒன்றிணைவதற்கு வெவ்வேறு மதங்களின் நண்பர்கள் மற்றும் அயலவர்களை வரவேற்கின்றன.

கடந்த மாதம் யூத, கிறிஸ்தவ, மற்றும் இஸ்லாமிய வழிபாட்டுத்தளங்களில் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. மேலும், உலகெங்கிலும் ஒருவரது மத நம்பிக்கையை சுதந்திரமாக கடைப்பிடிக்கும் ஆற்றலுக்கு கடுமையான சவால்கள் உள்ளன. அரசாங்கங்கள் மற்றும் குடிமக்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்படுவதன் மூலம் இந்த தாக்குதல்களை ஊக்குவிக்கும் வெறுப்பை வென்று சகலருக்குமான மத சுதந்திரத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும். ரமழான் மற்றவர்களின் நம்பிக்கைகளையும் பின்னணியையும் பகிர்ந்து கொள்ளுதல், மரியாதை மற்றும் ஒருவருக்கொருவர் ஆதரவு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வழங்குகிறது. அன்றாடம் நோன்பை திறந்து, உணவினைப் பரிமாறுவதன் மூலம் ரமழான் சமூகப் பிணைப்பிற்கு புத்துயிர் அளிப்பதோடு, சமூக சேவையை வலியுறுத்துகிறது. இந்த உணர்வுடன், மதங்களிற்கப்பால், நாம் ஒருவருக்கொருவர் பரஸ்பர கடமைகளை பிரதிபலிப்பதுடன் நம்முடைய சிறப்பானவற்றை முயல்வோம்.

உலகெங்கிலுமுள்ள எமது பல தூதரகங்கள் இப்தார் விருந்துபசாரங்களை நடத்துகின்றன. இவை எங்கள் மத்தியஸ்த வலிமை, மத சுதந்திரம்இ மத சிறுபான்மை சமூகங்களின் உள்ளடக்கம்இ மரியாதை, மற்றும்

சமாதானத்திற்கான கூட்டுப்பண்புகள் ஆகியவற்றிற்கான பொறுப்புகளை உறுதிப்படுத்தும் வெளிப்பாடாகும்.

புனித மாதமான ரமழான் மாதத்தின் ஆரம்பத்தில், அனைத்து முஸ்லிம்களுக்கும் மகிழ்ச்சிகரமான ரமழான் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.